

சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க, சார்பில் பாகநிலை முகவர்கள் மற்றும் வார்டு செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர்கள் க.சுரேஷ்குமார், கு.சின்னதுரை , மாவட்டப் பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம், நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் டாக்டர் வே.செழியன், ரா.வரதராஜன் , மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து , நகரச் செயலாளர்கள் கே.பாலசுப்பிரமணியம்,என்.பி.வேல்முருகன், ஏ.ஜி. ராமச்சந்திரன், பேரூர் செயலாளர்கள் பாபு, வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் மனோகரன், சோமசுந்தரம், சந்திரமோகன், சிவராமன், ஸ்டாலின் , சம்பத்குமார், ராஜா, செல்வராஜ், ரவி, ராஜவேல், கருணாநிதி, சசிகுமார், பர்கத்அலி, பாலமுரளி கிருஷ்ணன், அலெக்சாண்டர், அருண்குமார், செல்வமணி, பத்திரம் மனோகரன், மணிபாரதி, கல்லை வெங்கடேசன், வீராசாமி, அரசு, ராஜேந்திரன், சேகர், சூப் வேல்முருகன், குமார், நடராஜ், சந்திரசேகரன், பிரகாஷ், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கும்பகோணம் மாநகராட்சி 21 வது வார்டு, நால்ரோடு D.S.P அலுவலகம் அருகில் கும்பகோணம் சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடை கட்டப்பட்டு மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், சார் ஆட்சியர் ஹிருத்யா விஜயன் இணைந்து மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் காந்திராஜ், மாநகராட்சி மேயர் சரவணன், துணை மேயர் சு.ப.தமிழழகன், ஒன்றியச் செயலாளர் டி.கணேசன், ஜெ.சுதாகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி.ஆர்.தொட்சிணாமூர்த்தி மற்றும் மாநகர நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகர வார்டு செயலாளர்கள், பொறியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# குற்ற வழக்குகளில் 30 நாட்கள் சிறையில் இருந்தாலே பதவி பறிபோகும்!

# எதிர்க்கட்சிகள் மீது அறிவிக்கப்படாத எமர்ஜென்சியை ஏவும் பா.ஜ.க.!

**இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி பொறுப்பேற்ற நாளில் இருந்தே ஜனநாயக தூண்கள் எல்லாம் கலகலக்க தொடங்கி விட்டன. சி.பி.ஐ. தொடங்கி வருமான வரித்துறை, தேர்தல் ஆணையம் உள்ளிட்டவை அவரது உத்தரவுக்கு கீழ்படியும் ஒரு அமைப்பாக மாறி வருகின்றன. நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்த உருவாக்கப்பட்ட அனைத்து அமைப்புகளும் மோடியின் குரலுக்கு கட்டுப்படும் சூழல் உருவாகி வருகிறது. இதையெல்லாம் தாண்டி 'ஒரே நாடு, ஒரே கட்சி' என்ற நடைமுறையை உருவாக்கிடும் வகையில் சர்வதிகார தோரணையோடு, இந்தியாவில் உள்ள எதிர்கட்சிகளை எல்லாம் நசுக்க என்னென்ன வழிமுறைகள் உண்டோ அதையெல்லாம் ஒன்றிய பா.ஜ. அரசு மேற் கொண்டு வருகிறது. அதன் ஒரு வெளிப்பாடாக நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் இறுதிக்கட்டத்தில் 3 சட்ட மசோதாக்களை தாக்கல் செய்துள்ளனர்.**



எதிர்க்கட்சிகளின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கடந்த 20ம் தேதியன்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, யூனியன் பிரதேச அரசு சட்ட திருத்தம், 130வது அரசியல மைப்பு திருத்தம் மற்றும் ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு திருத்தம் ஆகிய 3 சட்ட திருத்த மசோதாக்களை தாக்கல் செய்துள்ளார். இந்த மசோதாக்களின் படி, பிரதமர், மாநில முதல்வர்கள், அமைச்சர்கள் குறைந்தது 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு தொடர்ந்து 30 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டால், அவர்கள் 31வது நாளில் தங்கள் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும், இல்லாவிட்டால் அவர்களின் பதவி தாமாக பறிக்கப்படும். தற்போதுள்ள யூனியன் பிரதேச அரசுச் சட்டம் 1963ல் இதுபோன்ற அம்சங்கள் இல்லை. எனவே, அரசியல் சட்டப்பிரிவைத் திருத்த வேண்டிய அவசியம் உள்ளதாக ஒன்றிய அரசு கருதுகிறது.

அரசியல் சட்டங்களை திருத்துவது என்பது பா.ஜ.விற்கு அல்வா சாப்பிடுவது போல. தாங்கள் நினைத்த மாதிரி இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் பனை மரத்தை கூட வில்லாக வளைப்பார்கள். குடியுரிமை திருத்த சட்டம், வக்பு திருத்த சட்டம் உள்ளிட்ட பல சட்டங்களை ஏற்கனவே திருத்திய பெருமையும் பா.ஜ.விற்கு உண்டு. அந்த வகையில் இப்போது ஒரு கருப்பு சட்டமாக தங்களுக்கு எதிரானவர்களை பதவி நீக்கம் செய்திட, இத்தகைய சட்ட திருத்தத்தை மேற்கொண்டு வருகின்றனர். இந்தியாவின் பன்முக தன்மை மீது தொடர்ந்து தாக்குதல் தொடுத்து வரும் பா.ஜ., இப்போது எதிர்க் கட்சிகளையும் மட்டுமல்ல, தாங்கள் ஆளாத மாநிலங்களில் உள்ள ஆளும் கட்சிகளையும் குறி வைக்க தொடங்கி விட்டது. இந்த மசோதா அரசியலமைப்பிற்கும் கூட்டாட்சி தத்துவத்திற்கும் எதிரானது என்றும், பா.ஜ. அல்லாத மாநில அரசுகளை சீர்குலைக்க அரசியலமைப்பு திருத்தம் செய்யப்படுவதாகவும் தொடர்ந்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குரல் எழுப்பி வருகின்றனர்.

குறிப்பாக டில்லி முதல்வராக இருந்த அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், மேற்கு வங்க அமைச்சர் பார்த்தா சட்டர்ஜி போன்றோர் வழக்குகளில் சிக்கி, சிறைக்கு சென்ற போதும் பதவிகளில் நீடித்ததால், ஒன்றிய அரசு தற்போது சட்டரீதியாக நூதன வலையை விரித்து வருகிறது. மக்களுடைய கவனத்தை திசை திருப்புவதில் கைதேர்ந்த மோடி ஆதரவாளர்கள், இப்போது இந்த சட்டத்தை கையில் எடுத்து கொண்டு, சாமானியர்கள் முதல் பிரதமர் வரை யார் தவறு செய்தாலும் தப்ப முடியாது என விளம்பரத்திற்கு தயாராகி விட்டனர்

இது ஒருபுறமிருக்க, இந்திய அரசியல் கடந்த சில ஆண்டுகளாகவே தரம் தாழ்ந்து வருகிறது என்பதில் மாற்றுக்கருத்தும் இல்லை. முன்பெல்லாம் அதிகாரத்தில் இருப்போர், தங்கள் மீது ஒரு குற்றச்சாட்டு எழுந்தால், தார்மீக அடிப்படையில் பதவி விலகி விட்டு, அவ்வழக்கை எதிர்கொள்வர். தங்களை குற்றமற்றவர் என நிரூபணம் செய்துவிட்டு மீண்டும் அந்த பதவியில் அமர்வர். முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் கூட அத்தகைய தார்மீக நெறிமுறைகள் பல சமயங்களில் கடைப்பிடிக்கப்பட்டன. ஆனால் மோடி பிரதமரான பின்னர், தனது கைப்பாவை அமைப்புகளை வைத்துக் கொண்டு கண்டபடி எதிர்க்கட்சியினர் மீது வழக்குகள் போடப்பட்டதால், குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் நபர்கள், தங்கள் பதவியை கெட்டியாக பிடித்துக் கொள்ள வேண்டிய நிர்பந்த நிலைக்கு தள்ளப்பட்டனர். அத்தகைய நபர்களை இனிமேல் ஒன்றிய அரசு, இத்தகைய கருப்பு சட்டங்களை பயன்படுத்தி உடனடியாக பதவியில் இருந்து வெளியேற்றும்.

எதிர்க்கட்சிகள் விமர்சிப்பது போலவே, ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள இந்த சட்ட மசோதா ஒரு கூர்மையான கத்திக்கு சமமானதாகும். இக்கத்தி ஒரு மருத்துவர் கையில் இருந்தால், நல்ல அறுவை சிகிச்சைகளுக்கு பயன்படும். ஆனால் வாக்கு திருடர்கள் கையில் சிக்கினால், அரசியல் அமைப்பை சீர்குலைக்கவே உதவும். எனவேதான் இந்த அரசியல மைப்பு திருத்த மசோதாவை தமிழ் நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்பட பல மாநில முதல்வர்களும், எதிர்க்கட்சிகளும் எதிர்கின்றன.

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியோ ஒருபடி மேலே சென்று, '130வது அரசியலமைப்பு திருத்த மசோதா எமர்ஜென்சி சட்டத்தை விட மோசமானது' என விமர்சித்துள்ளார். ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சிக்கு சாவு மணி அடிக்க பா.ஜ. தயாராகிவிட் டது என அவர் போட்டு தாக்கியுள்ளார்.



கடந்த 5 ஆண்டுகளில் கைதான அமைச்சர்கள்

கடந்த 5 ஆண்டுகளில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள் விவரம் வெளியாகி உள்ளது. அதன்படி:

மஹாராஷ்டிரா முன்னாள் உள்துறை அமைச்சர், அனில் தேஷ்முக் (சிவ சேனா கட்சி உத்தவ் தாக்கரே முதல்வராக இருந்தபோது அமைச்சராக பதவி வகித்தார். ஊழல் வழக்கில் கடந்த 2021 நவம்பர் 1ம் தேதி கைது செய்யப்பட்டார். ஒரு வருடத்திற்கு பிறகு, இவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.)

டில்லி முன்னாள் அமைச்சர், சத்யேந்தர் ஜெயின் (ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்தவர். சட்ட விரோத பண மோசடி வழக்கில், மே 30ம் தேதி 2022ம் ஆண்டு கைது செய்யப்பட்டார். இவர் இரண்டு வருடங்களுக்குப் பிறகு சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.)

மேற்குவங்க முன்னாள் அமைச்சர், பார்த்தா சாட்டர்ஜி (திரிணமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர். ஆசிரியர் பணி நியமனத்தில் முறைகேடு செய்ததாக எழுந்த புகாரில் ஜூலை 23ம் தேதி 2022ம் ஆண்டு கைது செய்யப்பட்டார்)

இந்தியாவில் கூட்டாட்சி தத்துவம் நடைமுறையில் இருப்பினும், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மாநில அரசுகள், ஒன்றிய அரசின் பூச்சாண்டிகளுக்கு பயந்தே தங்கள் வாழ்நாளை கடத்தியதும் நிஜம். ஒருகாலத்தில் மாநில அரசுகளை கலைக்க, 356 என்கிற சட்டப்பிரிவை ஒன்றிய அரசு ஒரு மிரட்டல் ஆயுதமாகவே பயன்படுத்தி வந்தது. தங்களுக்கு பிடிக்காத மாநில அரசுகள் அமைந்தால், சட்டம் ஒழுங்கை ஒரு காரணம் காட்டி அப்படியே 356 பிரிவை பயன்படுத்தி அந்த அரசுகளை கலைத்து விட்டு வேடிக்கை பார்க்கும். அந்த வகையில் இப்போது நடந்துள்ள சட்டதிருத்தம், 356 சட்டப்பிரிவை விட மோசமானதாக பார்க்கப்படுகிறது.

இப்புதிய சட்ட திருத்த மசோதாவை பொறுத்தவரை பா.ஜ.வினர் ஊழலுக்கும், ஒழுக்கத்திற்கும் எதிரான போராக மக்கள் மத்தியில் கட்டமைத்து வருகின்றனர். சிறையில் இருந்து கொண்டே முதல்வரும், அமைச்சர்களும் அரசாங்கத்தை நடத்துவது என்ன நியாயம் என பா.ஜ.வினர் கேள்வி எழுப்புகின்றனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சியினர், 'சிறைக்கு சென்ற அமித்ஷா என்ன ஒழுக்கசீலரா' என கேள்வி எழுப்பினர். கைது செய்யப்படுவதற்கு முன்பாக தான் தார்மீக அடிப்படையில் பதவியை ராஜினாமா செய்ததாகவும், நீதி மன்றத்தால் விடுவிக்கப்பட்ட பின்னரே மீண்டும் பதவி ஏற்றதாக அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்திருத்த மசோதா எப்படி பார்த்தாலும் பிரதமருக்கு கீழான ஒரு சர்வதிகார நாட்டை உருவாக்குவதையே நோக்கமாக கொண்டுள்ளது. தில்லுமுல்லுகளை நடத்தி மக்கள் வாக்கை களவாடியதாக குற்றச்சாட்டை எதிர் எதிர்கொள்ளும் பா.ஜ.க., இப்போது அரசியல் எதிரிகளின் மீது பொய் வழக்குகளை தொடுக்க இந்த சட்டத்திருத்தத்தை ஆயுதமாக பயன்படுத்திக் கொள்ள திட்டமிடுகிறது. தங்களுக்கு அடிபணியாத முதல்வர்கள் மற்றும் அமைச்சர்களை 'ஒழுங்காக நாங்கள் சொல்வதை கேளுங்கள். இல்லையென்றால் வழக்கு பாயும்' என மிரட்டல் விடுப்பதற்கு இத்தகைய சட்டத்திருத்தங்கள் ஒன்றிய அரசுக்கு கண்டிப்பாக உதவும்.

இன்னொரு பக்கம், பா.ஜ.க. பல சர்வதிகார சட்டங்களையும், சட்ட திருத்தங்களையும் நாடாளுமன்ற கூட்ட தொடர்கள் நிறைவு பெறும் தருவாயில் நிறைவேற்ற முன்வருவதும் இப்போது தெரிய வந்துள்ளது. மக்களால் தேர்வு செய்யப்பட்டுள்ள ஆட்சிகளை அச்சுறுத்த, நாடாளுமன்ற கூட்ட தொடர் முடியும் தருவாயில், இத்தகைய சட்டத் திருத்தங்களை நிறைவேற்றிவிட்டு, மக்கள் மத்தியில் அதை பேசுபொருளாக மாற்றிவிடுகிறது. பின்னர் அத்தகைய சட்டங்களை பயன்படுத்தி, பூச்சாண்டியும் காட்டுகிறது. கண்ணால் பார்ப்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் போன்ற நம்மூரு அறம் சார்ந்த பழமொழிகளை எல்லாம் கடாசிவிட்டு, வெறுப்பில் வழக்குபதிந்து சிறைக்கு அனுப்பிவிட்டு, எதிர்தரப்பினரின் அரசியல் வாழ்க்கையை சூனியமாக்கிட முயலும் பா.ஜ.க.வின் கபட நாடகம் எடுபடுமா என்பதை அடுத்து வரும் நாட்களே முடிவு செய்யும்.

## அறிக்கை சொல்வதென்ன?

மசோதாவின் குறிக்கோள்கள் மற்றும் காரணங்கள் குறித்த அறிக்கையில், அரசியலமைப்பு ஒழுக்கத்தைப் பாதுகாப்பதன் அவசரத்தையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மீது பொதுமக்களின் நம்பிக்கையை உறுதி செய்வதையும் எடுத்துக்காட்டுகிறது. கடுமையான குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுகளை எதிர் கொண்டு, கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டுள்ள ஒரு அமைச்சர், அரசியலமைப்பு ஒழுக்கநெறி மற்றும் நல்லாட்சி கொள்கைகளின் நியதிகளை முறியடிக்கலாம் அல்லது தடுக்கலாம், இறுதியில் மக்கள் அவர் மீது வைத்திருக்கும் அரசியலமைப்பு நம்பிக்கையைக் குறைக்கலாம். பதவி வகிக்கும் அமைச்சர்களின் குணாதிசயங்களும் நடத்தையும் எந்த சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க் கப்படுகிறது' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள.

## ஜம்மு காஷ்மீர் மட்டுமே குறியா?

அரசியலமைப்பு (130வது திருத்த) மசோதா 2025, யூனியன் பிரதேச அரசு (திருத்த) மசோதா 2025, ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டம் 2019 திருத்த மசோதா ஆகிய மூன்று மசோதாக்களை அமித்ஷா மக்களவையில் தாக்கல் செய்தார். ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டம் 2019ன் பிரிவு 54ல் திருத்தம் மே கொள்வதற்காக இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட சட்டம் அரசியலமைப்பின் 75, 164 மற்றும் 239AA பிரிவுகளையும், ஜம்முகாஸ்மீர் மறுசீரமைப்புச் சட்டம், 2019இன் பிரிவு 54ஐயும் திருத்த முயல்கிறது. ஜம்மு காஷ்மீர் முதல்வர் அல்லது அமைச்சர் தொடர்ந்து 30 நாட்கள் காவலில் வைக்கப்பட்டால் அவரை பதவி நீக்கம் செய்ய இந்த மசோதா வழிவகை செய்கிறது. கடுமையான குற்றச் செயல்களுக்காகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படும் முதல்வர் அல்லது அமைச்சரை பதவி நீக்கம் செய்வதற்கு ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம், 2019 ல் எந்த ஏற்பாடும் இல்லை என்பதால், இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட இருப்பதாக ஒன்றிய அரசு கூறுகிறது.

## நாட்டிற்கே புதியது

பா.ஜ.க. முன்மொழியும் புதிய மசோதாவில் நிறைய நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. மன்னர் விருப்பப்படி யாரையும் பதவி நீக்கம் செய்யக்கூடிய இடைக்காலத்திற்கு நாம் திரும்பிச் செல்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் யார் என்பது பற்றிய கருத்து இல்லை. அவருக்கு உங்கள் முகம் பிடிக்காது, எனவே அவர் ஈடியிடம் வழக்குத் தொடரச் சொல்கிறார், பின்னர் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் 30 நாட்களுக்குள் அழிக்கப்படுவார். "இது நாட்டிற்கே புதியது," நாடாளுமன்ற பெரும்பான்மையை அப்பட்டமாக தவறாகப் பயன்படுத்துவதை நாங்கள் கண்டிருக்கிறோம் என ராகுல் காந்தி வெகுண்டு எழுந்துள்ளார்.

## கருப்பு சட்டம்

நாட்டை சர்வாதிகாரத்தை நோக்கி நகர்த்த புலனாய்வு அமைப்புகளை வைத்து தங்களுக்கு எதிரானவர்களை பதவி நீக்கம் செய்ய, ஒரு கருப்புச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார் உள்துறை அமைச்சர். இதற்கு முன்பு, குடியுரிமை திருத்தச் சட்டம், வக்பு திருத்தச் சட்டம் என சிறுபான்மையின மக்களுக்கு எதிராக பல்வேறு சட்டங்களை எல்லாம் கொண்டு வந்தார்கள். அப்போதெல்லாம் இந்த சட்டங்களை தி.மு.க. எப்படி கடுமையாக எதிர்த்ததோ, அதே போல இந்த கருப்புச் சட்டத்தையும் எதிர்ப்போம். மக்களுடைய கவனத்தை மட்டும் திருப்புவது மட்டுமல்ல, நாட்டையே ஜனநாயக பாதையில் இருந்து திசை திருப்புவதற்காக இதை செய்கிறார்கள் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த சட்டத்தை கடுமையாக எதிர்த்துள்ளார்.

## நவம்பரில் இறுதிவடிவம்

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய இம்மசோதாவை எதிர்க்கட்சியினர் கிழித்தெறிந்து பல்வேறு கேள்விகளை எழுப்பினர். எனினும் குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இம்மசோதா நாடாளுமன்ற கூட்டுக்குழு (ஜேபிசி) ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த கூட்டுக் குழுவில் மக்களவையைச் சேர்ந்த 21 உறுப்பினர்களும், மாநிலங்களவையைச் சேர்ந்த 10 உறுப்பினர்களும் இடம் பெற்றிருப்பர். இவர்கள் மசோதாவில் உள்ள அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்தி, மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை அரசுக்கு பரிந்துரைக்க உள்ளனர். நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வு குளிர்கால கூட்டத்தொடராக வரும் நவம்பர் 3வது வாரத்தில் கூட்டப்படுகிறது. அதில் நாடாளுமன்ற கூட்டுக்குழுவினர் உரிய பரிந்துரைகளோடு மசோதாவை முன்வைப்பர். அதன் பின்னர் இறுதிவடிவம் கிடைக்கும்.

## ஒன்றிய அரசா காவல் அரசா?

ஒன்றிய அரசின் இந்த புதிய மசோதா தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தை குறைமதிப்புக்கு உள்ளாக்குகிறது. அற்பமான குற்றச்சாட்டுக்கள் மற்றும் சந்தேகங்களின் அடிப்படையில் நிர்வாக அமைப்புகள் நீதிபதியாகவும் தண்டிப்பவராகவும் மாற இது வழி வகுக்கிறது. இது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசின் மீது அடிக்கப்படும் மரண ஆணி. இந்த நாட்டை ஒரு காவல் அரசாக மாற்ற இந்திய அரசியலமைப்பு திருத்தப்படுகிறது என எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

நன்றி:
**தினகரன்**
24.8.2025